# தீவகத்தில் இராணுவக்குவிப்பு அவசியம் - பிரிகேடியர் குலதுங்க

(கொழும்பு)

ஊர்காவற்றுறையில் அண்மையில் கிளைமோர் கண்ணி வெடியில் சிக்கி படையினர் பலர் உயிரிழந்ததையடுத்து தீவகத்தில் ராணுவத்தினரின் தொகை அதிகரிக்கப்பட வேண்டும். சிரேஷ்ட இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் கெமுனு குலதுங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறையில் பயன்படுத்தப்பட்ட "கிளைமோர்" ஊர்காவற்றுறைக்கு படையினர் செல்வதற்கு முன்னர் வைக்கப்பட்டதாகவோ அல்லது புதிதாக வைக்கப் (4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 5 இதழ் 36
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 18-3-1994

## போருக்கு முடிவு காணவேண்டும்

சுதந்திரக்கட்சி செயலர்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் தொடரும் இன்றைய யுத்தத்திற்கு ஒரு முடிவு காணப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தாமசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; எவ்வித அர்த்தமும் இல்லாது இந்த யுத்தம் நீண்டு கொண்டுபோவது வேதனைக்குரியது இந்த யுத்தத்திற்காக வருடாந்தம் செலவிடப் (4ம் பக்கம் பார்க்க)

## தென் மாகாணசபை

# தேர்தலை நீதியாக நடத்தக்கோரி சிறிமா பொலிஸாருக்கு கடிதம்!

(கொழும்பு)

எதிர்வரும் 24-ம் திகதி நடைபெறவுள்ள தென்மாகாணசபைத் தேர்தல் நீதியாகவும் சுதந்திரமாகவும், நியாயமான முறையிலும் நடைபெறுவதற்கு பொலிஸார் தமது ஒத்துழைப்பை வழங்கவேண்டுமென எதிர்க்கட்சித் தலைவியும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கோரியுள்ளார். இது சம்பந்தமான கடிதம் ஒன்றை தென்பகுதியிலுள்ள பொலிஸ் நிலையங்கள் அனைத்துக்கும் அவர் அனுப்பிவைத்துள்ளார்.

தென் மாகாண சபைத் தேர்தல் அமைதியான முறை தேர்தலில் மக்கள் சுதந்திரமாக வாக்களிப்பதற்கும், சரி... நடைபெறுவதற்கும் பொலிஸார் கடமைப்பட்டுள்ளனர் என்றும் திருமதி பண்டாரநாயக்கா தமது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

பொலிஸார் எதிர்வரும் தேர்தலில் கட்சி வேறுபாடின்றி எந்தக் கட்சிக்கும் பாரபட்சம் காட்டாது தமது தேர்தல் கடமையை உரிய முறையில் நிறைவேற்ற வேண்டும்.

(4-ம் பக்கம் பார்க்க)

## 53 இடங்களைப்பெற ஐ.தே.க. எதிரணி போட்டி

(கொழும்பு)

தென்மாகாணசபைத் தேர்தலில் ஐக்கியதேசியக்கட்சி, பொதுசன ஐக்கிய முன்னணி, நவசமசமாஜக்கட்சி, சுயேச்சைக்குழு ஆகியன போட்டியிடுகின்றன.

தென்மாகாணசபையின் மொத்தம் 53 இடங்களுக்காக இந்தக் கட்சிகள் கடும் போட்டியில் ஈடுபடுவன வாக தெரிவிக்கப்பட்டது —இ

## புலிகளின் கற்பனையில் ராணுவ குழுக்கள் மோதல்

### சிப்பாய் பலி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தாக்குதலாக நினைத்து இரு இராணுவக் குழுக்கள் எதிர்பாராத விதமாக மோதிக்கொண்டதில் இராணுவ சோல்ஜர் ஒருவர் கொல்லப்பட்டார்.

இம் மோதலின்போது சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் இரு (4-ம் பக்கம் பார்க்க)

## உயரதிகாரிகள் தவறாக நடக்கலாம் - சந்திரிகா

(கொழும்பு)

தேர்தல் கடமைகளின் போது உயர் பொலிஸ் அதிகாரிகள் பிழையான பணிப்புரைகளை விடக்கூடலாம். ஆனால் கனிஷ்ட நிலையிலுள்ள பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் இவற்றை (4-ம் பக்கம் பார்க்க)

## தென்பகுதியில் புதிதாக மக்கள் சக்தி உதயம்

(கொழும்பு)

1956-ம் ஆண்டில் உருவாகியதைப் போன்ற மாபெரும் மக்கள் சக்தி ஒன்று தென் மாகாணத்தில் இப்போது உருவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மக்கள் சக்தி தென் மாகாண சபைத்தேர்தலில் போட்டியிடும் பொதுசன ஐக்கிய முன்னணிக்கு பக்கபலமாக இருப்பதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

தென்மாகாணத்தில் நடைபெறும் பொதுசன ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் இதுவரை 200க்கும் அதிகமான பௌத்த பிக்குகள் கலந்துகொண்டுள்ளனர்

இதேவேளையில் எதிர்வரும் வாரம் இடம்பெறவுள்ள மேற்படி முன்னணியின் இறுதிதேர்தல் (4-ம்பக்கம் பார்க்க)

## புலிகளைத் தாக்குவதற்கு திட்டங்கள் தயார் - பிரிகேடியர் கெமுனு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைக்கான திட்டங்கள் யாவும் தயார் நிலையில் உள்ளதாக சிரேஷ்ட இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் கெமுனு குலதுங்க தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர் மத்தியில் நேற்று உரையாற்றும்போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் இதுபற்றி தெரிவிக்கையில்; இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் கிழக்கு மாகாணத்தில் தற்போது பாதுகாப்புநிலை பூரண திருப்திகரமாக இருப்பதாகவும் தெரிவித்தார். (க-இ)

## தென்பகுதியில் கொலைப்படையை காட்டி அரசு அச்சுறுத்தல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி தென் மாகாண சபைத் தேர்தலில் சட்ட விரோதமான முறையில் அரச வாகனங்களைப் பாவித்து வருவதுடன் கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட கொலைப்படையை தமது வேலைகளில் பாவிக்கவைத்து பொதுமக்களை அச்சுறுத்தியும் வருகிறது.

பொதுசன ஐக்கிய முன்னணி (4ம் பக்கம் பார்க்க)

## இரு பிரிகேடியர்கள் ராணுவத்திலிருந்து ஓய்வு

(கொழும்பு)

இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரிகளான பிரிகேடியர் கொலின் திஸரெட்ண, பிரிகேடியர் உபாலி அமரக்கோன் ஆகிய இருவரும் தமது சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(4ம் பக்கம் பார்க்க)

### க. பொ. த. (உ/த) பரீட்சை:

## பரீட்சை நிலைய நகர இலக்கங்கள் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உ/த) 1994 ஆகஸ்ட் பரீட்சைக்கு யாழ். மாவட்டத்தில் நிறுவப்படும் பரீட்சை நிலைய நகர இலக்கங்களை யாழ். கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. அதன் விபரம் வருமாறு:

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் - இராணுவம் மோதல் மட்டு - பகுதியில் அதிகரிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையில் அண்மைக்காலமாக மோதல் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் நேற்று கொழும்பில் தெரிவித்துள்ளனர்.

கதிரவெளிக்கும் (சங்கமுறிப்புக்)குளத்திற்கும் இடையில் இருதரப்பினருக்கும் இடையில் மோதல் இடம்பெற்றதாகவும் போரதீவுப் பகுதியிலும்

(4ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெ கிடைக்குமிடம் எஸ். ரீ. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி 739)

### பழைய புதிய மணிக்கூட்டு உதிரிப்பாகங்கள்

எந்தவித பழைய, புதிய மேசை, சுவர் மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள் (ஆண்கள், பெண்கள்) ஆகியவற்றின் உதிரிப்பாகங்கள் போதியளவு எம்மிடம் கையிருப்பில் உள்ளதால் உங்கள் சகல மணிக்கூடுகள், ரேடியோக்களை எம்மிடம் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக்கொள்ளலாம். மூர்த்தி வாச் அன்ட் ரேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். கிளை:- கண்டி வீதி, சாவகச்சேரி. (ஏ-3906)

## உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணார்பண்ணை, நீராவியடி தோப்பு ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் கோவில் அலங்கார உற்சவம் நேற்று வியாழக்கிழமை 3-30 மணிக்கு கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் இத்திருவிழாக் காலத்தில் தினமும் சிறந்த கல்வியாளர்கள் அருளுரை வழங்குவார்கள். இறுதி நாளான எதிர்வரும் 28ம் திகதி விசேட மேளக்கச்சேரி, வில்லிசை, இன்னிசை மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். -162

## கிராமதின விழா

(யாழ்ப்பாணம்)

வட இலங்கைச் சர்வோதயத்தின் கிராமதின விழா திட்டத்தின் நிர்மாணக்கிராம மாகிய மட்டுவில் நுணுவில் தமிழ்ச்சங்கத்தின் மேற்படி விழா அண்மையில் நிலைய கட்டிடத்தில் தலைவர் கவிஞர் சி. சதாசிவம் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக கைதடி நுணுவில் அ. த. க. வித்தியாலய அதிபர் க.இளையதம்பி கலந்துகொண்டார் திருமதி இரவீந்திரராசா சிறப்புரை நிகழ்த்தினார்.

## நெற்செய்கை ஊக்குவிப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நெடுங்கேணி வட்டத்தில் கால போக நெற்செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு வழிமுறைகளை மேற்கொண்டு வருகின்றது. கடந்த போகத்திற்கு போரூக் நிறுவனத்தின் உதவியுடன் நெற் செய்கைக்கான உள்ளீடுகளை கிராமிய உற்பத்திக்குழுக்களினூடாக வழங்கியுள்ளது.

மாமடுவில் 21 குடும்பங்களும், ஊஞ்சாக்கட்டியில் 23 குடும்பங்களும், பட்டிக் குடியிருப்பில் 31 குடும்பங்களும், ஒலுமடுவில் 17 குடும்பங்களும் நெடுங்கேணிவடக்கில் 22குடும்பங்களும், நெடுங்கேணி தெற்கில் 26 குடும்பங்களும், பழம்பாசியில் 11 குடும்பங்களும், கற்குளத்தில் 22குடும்பங்களும் கருதோடையில் 23 குடும்பங்களும் ஆக மொத்தம் 15 குடும்பங்களுக்கு நெற் செய்கைக்கான உள்ளீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு உள்ளீடுகள் வழங்கப்பட்டமையால் நெடுங்கேணி வட்டத்தில் உள்ள விவசாயிகள் மிகுந்த ஆர்வத்துடன் நெற்செய்கையில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## இடமாற்றம்

(நெல்லியடி)

வடமராட்சி இக்கம் ரோட்டில் இயங்கி வந்த வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை தலைமைச் செயலகம், அண்மையில் கொடிகாமம் வீதி கரவெட்டிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. -160

## இன்று

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆசிரமசைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் தொண்டமனாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடாத்திவரும் வாராந்த கருத்தரங்கில் இன்று வெள்ளிக்கிழமை வைத்தியக் கலாநிதி வி. பாலகிருஷ்ணன் சைவ சித்தாந்தத்தின் தெளிவே சித்த மருத்துவம்' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றுகிறார். (ஈ)

0 0

(அச்சுவேலி)

புத்தூர் மெதடிஸ்மிசன் பாடசாலையின் இல்ல விளையாட்டு போட்டிகள் 18-ம் திகதி வெள்ளிக்கிழமை அதிபர் திரு. எஸ். மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

தம்பசிட்டி மெ. மி. த. க. பாடசாலை சைவ மன்றம் இன்று 18-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை எடுக்கும் சமய நிகழ்ச்சிகளின் போது சிறப்பு நிகழ்ச்சியாக சுவாமி சித்பவானந்தாவின் நற்சிந்தனையும சுவாமி விவேகானந்தர் சிக்காகோ நகரில் ஆற்றிய சொற்பொழிவின் நூற்றாண்டு விழா ஞாபகார்த்தமாக மாணவர்க்கான நூல் அன்பளிப்பும் இடம் பெறும்.

0 0

(யாழ்ப்பாணம்)

யா/கோண்டாவில் இந்துமகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி. ப. 1-30 மணிக்கு அதிபர் செல்வி பா. மார்க்கண்டு தலைமையில் நடைபெறவுள்ளது.

0 0

(கொழும்புத்துறை)

கனியூரம் பருளாய் தொண்டர் சபையினர் அண்மையில் நடாத்திய பஞ்சபுராண மனனப் போட்டியின் பரிசளிப்பு வைபவம் இன்று 18-ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறவுள்ளது. —154

0 0

(கொழும்புத்துறை)

சங்கரத்தை பிட்டியம்பதி ஸ்ரீ பத்திர காளி அம்மன் கோவில் வருடாந்த உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தேர்த் திருவிழா 29-ம் திகதியும் தீர்த்த உற்சவம் 30-ம் திகதியும் இடம்பெறும். —154

# ★ மின் உற்பத்தி பாதிக்கும் அபாயம்
# இலங்கையில் முதலீடு செய்ய வெளிநாட்டவர் பின்னடிப்பு!

(கொழும்பு)

இலங்கையின் மின்சார உற்பத்தியில் எதிர் காலத்தில் பாரிய பாதிப்புகள் ஏற்பட இருப்பதினால் இலங்கையில் முதலீடு செய்வதற்கு முன் வந்த பலவெளிநாட்டவர் வேறுநாடுகளைத் தேடிச் செல்லத் தொடங்கி விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேநேரம் மின்சார உற்பத்தியில் ஏற்பட இருக்கும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக திருமலையில் நிலக்கரி மின்நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

இந்த மின்நிலையம் திருமலையில் ஆரம்பிக்கப்பட்டால் சுற்றுச் சூழல் பெரிதும் பாதிக்கப்படுவதுடன் மக்களுக்கும் தினமும் ஆபத்துக்கள் ஏற்படும் என்று நிபுணர்கள் கூறியுள்ளார்கள். இதனால் திருமலையில் இந்த மின்நிலையம் ஆரம்பிக்கப்படுவதற்கு பொது மக்கள் பலத்த எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். (வி - வி)

## சைக்கிள் திருட்டு

(பளை)

பளை சந்தைப்பகுதியில் பொருட்களை வாங்கச் சென்ற பேராலையைச் சேர்ந்த இனனம்பு என்பவரின் இரண்டு சைக்கிள்கள் வெவ்வேறு நாட்களில் களவாடப்பட்டன. இதுதொடர்பாக பளை காவல் துறையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. -156

## பாடசாலைகள் இணைப்புமையம்

(அச்சுவேலி)

கோப்பாய் கல்விக்கோட்ட அலுவலகத்தின் நிர்வாக அமைப்பிற்கு உட்பட்ட 43 பாடசாலைகளையும் உள்ளடக்கி ஐந்து அணியங்கள் செயற்படுகின்றன.

சூழல் அமைவிடம் ஆகிய வற்றை அடிப்படையாகக் கொண்டு நீர்வேலி, அச்சுவேலி, புத்தூர், கோப்பாய், உரும்பிராய் ஆகிய ஐந்து அணிய அமைப்பும் அவ்வத் தலப் பாடசாலைகளின் இணைப்பு மையமாக செயற்பட்டு வருகின்றன. -74

## தொழிலாளருக்கு பாராட்டு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கடற்றொழில் ஒன்றியத்தின் சக கோட்டைத் தொழிலாளர்கள் ஒரே நாளில் 10 மணித்தியாலங்களில் 2121 பரல்களை இறக்கி புதிய சாதனையை யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் பாராட்டியுள்ளார்.

மக்களின் நிலைமை உணர்ந்து தாமாகவே இவ்விதமாக உதவி புரிபவர்களை நான் பெரிதும் பாராட்டுகிறேன். இத்தொழிலாளர் குழாத்தின் தலைவராக செயல்படும் திரு. புத்திரசிகாமணியின் தலைமைத்துவத்தையும் பாராட்டுகின்றேன். என்றும் அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். -158-வி

## நிர்வாக அறிக்கை சமர்ப்பிக்க பணிப்பு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கான கடந்த 1991 தொடக்கம் 1993 வருடங்களுக்கான நிர்வாக அறிக்கையை விரைவில் வெளியிடுவதற்கான சகல நடவடிக்கைகளையும் யாழ். செயலகம் பரிபாலனக் கிளையினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கூறிய மூன்று வருடங்களுக்கான சகல யாழ். மாவட்டத் திணைக்களங்களின் தலைவர்களும் தங்கள் பிரிவிற்கான அறிக்கையை உடனடியாகத் தமக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப. திலகநாயகம் போல் தெரிவித்துள்ளார்.

இவ்நிர்வாக அறிக்கையில் இடம்பெற வேண்டிய முக்கியமான விடயங்கள் யாவும் உரிய விபரங்களுடன் இரண்டு பிரதிகளுடன் தமிழ் மொழியில் மூன்று வருடங்களுக்குமான நிர்வாக அறிக்கையை வெவ்வேறாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்பதை ஞாபகப்படுத்திக் கடந்த 2ம் திகதி திணைக்களங்களுக்கு கடித மூலம் தெரிவித்துள்ளார். 154-வி

## கல்வி கற்க மின்சார வசதி

(அச்சுவேலி)

அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் க. பொ. த. சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு இரவு வேளையில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

மாணவர் அமைப்பு நலன் விரும்பிகள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் மின்சார வசதிகள் செய்யப்பட்டு வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

## ஒய்வுபெற்ற சிப்பாய் அடித்துக் கொலை

(கொழும்பு)

ஒய்வுபெற்ற ராணுவ சிப்பாய் ஒருவர் பொல்லினால் அடித்துக் கொல்லப்பட்டார். வத்துகொரபறஹதர ட்ட என்ற இடத்தில் இடம்பெற்ற இக்கொலை தொடர்பாக இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

டபிள்யூ. தர்மசேன டி சில்வா (50 வயது) என்பவரே இவ்வாறு கொலைப்பட்டவராவார். -ரி

## இரு தங்கநகைகள் கண்டெடுக்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து மகளிர் கல்லூரி வளவில் அப்பாடசாலை மாணவிகளால் கண்டெடுக்கப்பட்டு அதிபரிடம் ஒப்படைக்கப்பட்ட இரு தங்கநகைகள் நல்லூர் கோட்டக்கல்வி அலுவலகத்தில் உள்ளது.

இவற்றை தவறவிட்டவர்கள் உரிய அடையாளம் காட்டி நல்லூர் பிரதிக் கல்விப்பணிப்பாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிறுவர்களுக்கு போஷாக்கு உணவுத் திட்டம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபை, நகரசபைப் பகுதியில் இயங்கி வரும் சிறுவர் பாடசாலைகளில் கல்வி பயிலும் சிறுவர்களுக்கு போஷாக்கு உணவு வழங்கும் அபிவிருத்தித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் நகரசபைச் செயலாளர் திரு. கே. சண்முகநாதனால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சனசமூக நிலையங்களினால் நடாத்தப்படும் சிறுவர் பாடசாலை சிறுவர்களுக்கே இச்சத்துணவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. —52-வி

## விசேட வகுப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களில் மிகவும் பின்தங்கிய மாணவர்க்கு தமிழ்-கணிதம் ஆகிய பாடத்துறைகளில் விசேட வகுப்புக்கள் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

## உலர் உணவு விநியோகம்

(மானிப்பாய்)

மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத்தினர் வறுமை நிவாரண உணவு முத்திரையின் 11ம் இலக்க புள்ளிக்கு உலர் உணவுப் பொருட்களை தற்போது வழங்கி வருகின்றனர். -71

## புனிதசூசையப்பர் திருவிழா

(அல்வாய்)

புலோலி சாந்தா தோட்டம் புனித சூசையப்பர் வருடாந்த திருவிழா பருத்தித்துறை பங்குத்தந்தை திருத்திரு பி. எம். இம்மானுவேல் அடிகள் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. நாளை 19ம் திகதி சனிக்கிழமையுடன் திருவிழா நிறைவு பெறுகின்றது. -59

## பாடசாலையில் திருட்டு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கல்விக் கோட்டத்திலுள்ள மாதனை மெதடிஸ் மிஷன் தமிழ்கலவன் பாடசாலையிலிருந்து பாடசாலை தளபாடங்கள் திருடப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் பருத்தித்துறை தமிழீழ காவல் துறையில் புகார் செய்துள்ளார். —52

## கோப்பாய் கோட்ட பாடசாலைகள் உடற்பயிற்சி போட்டி முடிவுகள்

(அச்சுவேலி)

கோப்பாய் கோட்ட கல்வி அலுவலகப் பிராந்தியத்தில் உள்ள பாடசாலைகளுக்கிடையிலான உடற் பயிற்சிப் போட்டிகள் புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியில் வெற்றிபெற்ற பாடசாலைகளின் விபரம்:

13 வயது ஆண்கள்:

1. சிறுப்பிட்டி அ. த. க. பாடசாலை, 2 உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை, 3. உரும்பிராய் றோ. க. பாடசாலை.

13-வயதுப் பெண்கள்

1. அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை 2. கோப்பாய் மகாவித்தியாலயம் 3. அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை,

15-வயது ஆண்கள்

1. அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை 2. கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி 3. உரும்பிராய் இந்துக் கல்லூரி.

15-வயது பெண்கள்

1. அச்சுவேலி புனித திரேசவ் மகளிர் கல்லூரி 2. புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி 3. அச்சுவேலி மகாவித்தியாலயம்.

17-வயது ஆண்கள்

1. உரும்பிராய் இந்துக் கல்லூரி 2. இடைக்காடு மகா வித்தியாலயம்.

17-வயது பெண்கள்

1. அச்சுவேலி மகாவித்தியாலயம் 2. கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி 3. கோப்பாய் மகா வித்தியாலயம்.

19-வயது பெண்கள்:

1. அச்சுவேலி மகா வித்தியாலயம் 2. கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி .-74

மணிவாக்கு

பழிவாங்குதல் வீர மன்று! ஆறுதல் பொறுப்பதே வீரம்.
- ஷேக்ஸ்பியர்

# தென்பகுதி தேர்தல் பிரசாரங்களில்

# இனவாதப் பேச்சுகளுக்கு முன்னுரிமை

(கொழும்பு)

தென் மாகாணத்தில் தற்போது நடைபெற்று வரும் தேர்தல் பிரசாரங்களில் ஆளும் ஐ. தே. கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் வடக்குக் கிழக்கு தமிழ் மக்கள் பிரச்சினையை மையமாக வைத்து இனவாதத்தைத் தூண்டி, சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறுவதற்குப் பெரும் முயற்சிகள் செய்து வருகின்றார்கள் என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஒருவருக்கொருவர் இனவாதப் பிரசாரங்களையே நேரடியாகவும், மறைமுகமாகவும் செய்து வருகிறார்கள்.

இவ்விரு கட்சிகளும் வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான தமது ஆலோசனைகளை இதுவரை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்கவில்லை. தமிழர்களுக்கு ஒரு பகுதியினர் தமது தீர்வுத் திட்டத்தை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பித்தால் அதை மற்றவர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திச் சிங்கள மக்களைத் தம்பக்கம் திருப்பி விடுவார்கள் என்று எண்ணுகிறார்கள்.

வடபகுதி சென்று வரும் தென்பகுதி 'புத்திஜீவிகள்' வடபகுதியில் மக்களும், விடுதலைப் புலிகளும் எதற்கும் தயாராகவே இருக்கிறார்கள், யுத்தத்துக்கும் தயார் - யுத்த நிறுத்தத்துக்கும் தயார்'' என்று தெற்கே வந்து கூறுகிறார்கள். அதற்கு மேற்படி கட்சிகள் முக்கியத்துவம் கொடுப்பதாக இல்லை.

நாடு எவ்வாறு போனால் எமக்கு என்ன? எமக்குத் தேர்தல்களே அவசியம். ஆட்சியைக் கைப்பற்றுவதே முக்கியம் என்ற கொள்கையையே இந்த இரு பெரும் கட்சிகளும் ஆண்டாண்டு காலமாகக் கடைப்பிடித்துவருகின்றன.

இதன் அடிப்படையிலே இன்று தென் மாகாணத்தில் தேர்தல் பிரசாரங்கள் நடைபெற்று வருகின்றன. தென் மாகாணத் தேர்தலும், அதைத் தொடர்ந்து நடைபெற இருப்பதாக கூறப்படும் நாடாளுமன்றத் தேர்தலும், ஜனாதிபதி தேர்தலும் முடிவடைந்த பின்பாவது இலங்கையில் இனப்பிரச்சினைக்கு முடிவு ஏற்படுமா? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். என்றும் அவதானிகள் தெரிவிக்கிறார்கள்.

-வி-ம

## நமது நோக்கு

### புதிய ராகம்! புதிய பல்லவி!!

"வடக்குக் கிழக்கை பிரிக்க சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தத் தேவை இல்லை. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் பெற்றாலே போதுமானது!" என மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஸ் குணவர்த்தன கூறியுள்ளார்.

இதேவேளை, சுதந்திரக் கட்சியும் வேறு சில பௌத்த இனவாதக் குழுக்களும் வாக்கெடுப்புத் தேவை இல்லை, ஜனாதிபதியின் அதிகாரமே போதும் எனவும் கூறியுள்ளார்கள்.

கிழக்கிலே சர்வஜன வாக்கெடுப்பு வேண்டும் என்று பாடிவந்த பல்லவியை நிறுத்திவிட்டு, சரணத்திற்குப் போகு முன்பே, புதிய ராகத்திற் புதிய பல்லவி பாடுவது ஏன்?

வாக்கெடுப்பு நடாத்தால், சிலவேளை, அது இணைப்புக்கு ஆதரவாகி விடுமோ என அஞ்சுகிறார்களா?

வாக்கெடுப்பு நடாத்தால் முஸ்லீம்கள் பலிக்கடா ஆகிவிடுவார்கள் எனப் பகிரங்கமாகவே முஸ்லீம்கள் கருத்து வெளியிடுவதால், இவ்வேளை அவர்கள் தேர்தலைப் பகிஷ்கரிப்பார்களோ என்ற சந்தேகம் கிளம்பியுள்ளதா?

ஜனாதிபதியின் அண்மைக்காலப் போக்கால், தமிழர்கள் மாத்திரமல்ல முஸ்லீம்களும் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். இது வாக்கெடுப்பில் பிரதிபலிக்கும் என்ற அச்சம் தோன்றியுள்ளதா?

ஒரு பகுதித் தமிழ்ப் பிரதிநிதிகளே நாடாளுமன்றத்திற்குச் சத்தியப் பிரமாணம் எடுக்காத நிலையில், நாடாளுமன்றம் எடுக்கும் முடிவுகளை தமிழர்கள் ஏற்கப் போகிறார்கள்?

1972ல் சுதந்திரக்கட்சியினர் புதிய அரசியல் சட்டத்தை ஆக்கும்போது அரசமைக்கும் மன்றில் டலி சேனநாயக்கா கூறியது என்ன?

"மக்களிடமிருந்து பெற்ற ஆணை என்றுகூறிக் கொண்டு ஜன நாயகத்திலே இலகுவாக மாற்ற முடியாது. பெரும்பான்மை ஆதரித்தாலும் பேச்சுரிமை போன்ற சில அடிப்படை உரிமைகளை மாற்ற முடியாது!"

பல இனங்கள் வாழும் நாட்டிலே ஒரினப் பெரும்பான்மை சிறுபான்மை இனத்தைப் பாதிக்கும் சட்டம் இயற்றலாமா?

தமிழர்கள் தாயகத்தைப் பிரிக்க 'அவர்கள்' முடிவெடுக்க முடியுமா?

# மாகாண சபைகளினால்

# பெரும் நிதி விரயமாகிறது

(கொழும்பு)

இலங்கையில் மாகாணசபைகள் அமைக்கப்படுவதால் பெருமளவு நிதி விரயமாகிறது என்று உலகவங்கி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

1993-ம் ஆண்டு வெளியிடப்பட்ட உலக வங்கியின் அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைகள், மாவட்டச் செயலாளர் அலுவலகம் இரண்டையும் ஒன்றாக இணைத்து நடைமுறைப்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

மத்திய அரசாங்கத்தின் செலவில் 8/1 தொடக்கம் 10/1 வரை செலவினங்களை மாகாண சபை ஏப்பமிடுகிறது என்று உலக வங்கியின் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

—ம-வ

## பேராளர் மாநாடு

(வேலணை)

அகில இலங்கை இந்து இளைஞர் பேரவையின் பதினொராவது தேசிய பேராளர் மாநாடு எதிர்வரும் 26-ம், 27-ம் திகதிகளில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த கல்முனை இராமகிருஷ்ண சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

—75

## மலேரியா வாரம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் மலேரியா தடுப்பு வாரமாகக் கொண்டு இன்று 18ம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் இம்மாதம் 25ம் திகதி வரை சகல பிரதேசச்செயலர் பிரிவுகளிலும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ்ப்பாணம் செயலர் தெரிவித்துள்ளார்.

162

# டி. பி.யின் பாதுகாப்பால் எதிரணிக் கூட்டம் ரத்து

(கொழும்பு)

ஜனாதிபதியின் பாதுகாப்பு கருதி பொதுசன ஐக்கிய முன்னணியின் முக்கிய பிரசாரக் கூட்டம் பொலிஸாரினால் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

காலியில் எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, மேல் மாகாண முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க கலந்து கொள்ளும் பிரமாண்டமான பேரணியும் கூட்டமும் எதிர்வரும் 21-ம் திகதி திங்கட்கிழமை நடாத்த திட்டமிடப்பட்டு அதற்கான அனுமதியும் காலி பொலிஸாரிடம் பெறப்பட்டிருந்தது.

எனினும் இதே தினம் காலியில் ஜனாதிபதி விஜயதுங்க கூட்டம் ஒன்றில் கலந்து கொள்ள இருப்பதால் அவரது பாதுகாப்பு கருதி எதிரணியினரின் பேரணியும், கூட்டமும் ரத்துச் செய்யப்படுவது இதற்கான அனுமதியை பொலிஸார் ரத்துச் செய்துள்ளனர். இதையடுத்து எதிரணியினர் கடும் ஆத்திரமடைந்துள்ளனராம். (ஜ)

## தையல் இயந்திரம் வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக் குழுவானது கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் கிளிநொச்சி பாரதிபுரம் கிராமத்திலுள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழும் ஏழு குடும்பங்களுக்கு தையல் தொழிலை மேற்கொள்ளும்பொருட்டு தையல்இயந்திரங்களை வழங்கியுள்ளது.

# உற்பத்தி எழுச்சி வாரம் போட்டிகள் நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடாத்தப்படும் உற்பத்தி எழுச்சி வாரம் ஏப்ரல் 24ம்திகதி முதல் 30ம் திகதி வரை மிக எழுச்சியுடன் நடைபெறவிருக்கிறது.

இவ்வாரத்தில் நீச்சல், பாய் மரம் ஓட்டுதல், துடுப்பு வலித்தல், வலை பின்னுதல், தலாமிதித்தல், மாட்டு வண்டிச் சவாரி, உழுதல், நிலம்கொத்துதல், புதிய உணவு வகைதயாரித்தல், பனைமரம் ஏறுதல், கைப்பணி, சிறுகைத்தொழில், பதநீர் உற்பத்தி, வீட்டுத் தோட்டம் அமைத்தல், நல்லின ஆடு மாடு வளர்த்தல், பொது அறிவு, குளம் புனரமைப்பு, வாய்க்கால் திருத்துதல், வீதி திருத்துதல் ஆகிய போட்டிகள் நடைபெறவிருக்கின்றன.

அத்துடன் இம்முறை நிலமற்ற, வசதியற்ற ஆனால் ஊக்கமுள்ள குடும்பங்களுக்கு கிராமிய உற்பத்திக் குழுக்கள் மூலம் தரிசாக விடப்பட்டிருக்கும் விவசாய நிலங்களை தற்காலிக அடிப்படையில் பயன்படுத்துவதற்கு வழங்குதல், சிரமதானம், குளம் புனரமைப்பு, வாய்க்கால் திருத்துதல் போன்ற செயற்பாடுகளும் சிறப்பம்சமாக சேர்க்கப்பட்டுள்ளன.

இவ்எழுச்சி வாரப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் விண்ணப்பதாரர்கள் அந்தந்த மாவட்ட / கோட்ட / வட்ட கிராமிய உற்பத்திக் குழுக்களினூடாக விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பங்குபற்ற விரும்பும் போட்டிகளின் பெயரைக் குறிப்பிட்டு 01-04-1994க்கு முன்பாக அனுப்புதல் வேண்டும்.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் தங்கப் பதக்கங்கள், கேடயங்கள் சான்றிதழ்களும் எதிர்வரும் மேதினக் கூட்டத்தில் வைத்து வழங்கப்பட இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## கடற்புலிகளின் கிராமியப் பாசறை

(அச்சுவேலி)

யாழ். கண்டுக்குளி சனசமூக நிலைய முன்றலில் போர்க்கால சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு கடந்த 14-ந் திகதி திங்கட்கிழமை கடற்புலிகளின் கிராமியப் பாசறை ஒன்று நடைபெற்றது. இதில் போர்க்கால கருத்தரங்கு மக்களின் பங்களிப்பு என்ன என்பதை விளக்கி விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்கள் உரையாற்றினர்.

-59

## இராசி பலன்
18 - 03 - 1994
வெள்ளிக்கிழமை
(தமிழுக்கு பங்குனி 05)

ஷஷ்டி ந. இ 12-13 வரை கார்த்திகை ந. ப. 12-04 வரை. இராகுகாலம் காலை 10-49 முதல் 12-19 வரை. சுபநேரம் காலை 6-19 முதல் 7-49 வரை. ஷஷ்டி விரதம்.

மேஷம்: வேதாந்தம், சத்துரு தொல்லை, மனமாற்றம்.
இடபம்: உழைப்பு வெற்றி, குடும்ப சுகம், திலாபம்.
மிதுனம்: விதண்டாவாதம், தந்திரம் வெப்பநோய்.
கடகம்: செல்வாக்கு வேலைகை, பணப் புழக்கம்.
சிம்மம்: வாக்குமேன்மை, ஜனவசியம், ஆழ்ந்த சிந்தனை.
கன்னி: வருத தொல்லை, பொருள் செலவு, அலைச்சல்.
துலாம்: நீசர் தகராறு, பிதாசிந்தை, மனவேற்றுமை.
விருச்சிகம்: சத்திய வெற்றி நண்பர் சகவாசம், விருந்து.
தனுசு: தொழில் லாபம், யோசனை, நல்முயற்சி.
மகரம்: காரிய தடை, குடும்ப கலவரம், மனவேதனை.
கும்பம்: அடாவடித்தனம், குருத்துமோதல், மனச்சுமை.
மீனம்: அதிகாரி சந்திப்பு, பதவிமாற்றம், பாராட்டு.

— ஜோஸ்யர்.

## தவக்கால நற்சிந்தனை

"மனிதன் அப்பத்தினால் மட்டுமன்று, கடவுள் வாயினின்று வரும் ஒவ்வொரு சொல்லினாலும் உயிர் வாழ்கிறான்."
(மத். 4:4 அ)

இறை வார்த்தை எமக்கு நிறை வாழ்வளிக்க வல்லது. எம் குறைகளைப் போக்கி நல்ல துறையிலே இட்டுச் செல்ல வல்லது. இவ்வார்த்தையினில் வாக்கினை நாளும் தியானித்தால் பாவம் களைந்தின்று வாழ வாம் அழிந்துபோகும் உடலுக்காக உழைப்பது அழியாத ஆன்மாவுக்காக உழைப்போம்.

-மோ. தா

# கள்ள வாக்குகள் அச்சடிக்க முயற்சி!

(கொழும்பு)

தென்மாகாண சபைத் தேர்தலுக்கும் உபயோகிக்கப்படும் 'வாக்குச்சீட்டு' அச்சிடுவதற்கான தாள் அரசாங்க அச்சகத் திணைக்களத்தில் இருந்து வெளியே எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியினர் இந்தச் செயலில் ஈடுபட்டுள்ளதாகவும் இந்தத் தாளை உபயோகித்து கிரிபத்கொடையில் உள்ள அச்சகத்தில் கள்ள வாக்குகள் அச்சிட இருப்பதாகவும் கூறப்படுகிறது.

ஆனால் அச்சக உரிமையாளர் அச்சடிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார் என்று 'சிங்கள பத்திரிகை' ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(ம-வ)

மனையினைச் சுற்றி மயிரினை வைத்தவர்
மசியினை எட்டி காலால் உதைப்பார்

